## கொடைக்கானல் நகராட்சி

2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் நாள் (28.12.2020) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கொடைக்கானல் நகராட்சியில் நாள் ஒன்றுக்கு சேகரமாகும் விற்பனை செய்ய இயலாத, எளிதில் தீப்பிடிக்கக் கூடிய உலர் கழிவுகளை எரியூட்டும் வகையில், தினமும் சேகரமாகும் உலர் கழிவுகளை பழனி நகராட்சியில் அமைக்கப்பட உள்ள எரியூட்டும் மையத்திற்கு அனுப்பவும், மேற்குறித்த எரியூட்டும் மையத்திற்கான கட்டுமானம் , இயக்குநர் மற்றும் பராமரிப்பு செலவினத்தினை கொடைக்கானல் நகராட்சி பகிர்ந்து கொள்ளவும் உரிய மன்ற அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொடைக்கானல் நகராட்சியில் நாள் ஒன்றுக்கு சேகரமாகும் 8.5 மெட்ரிக் டன் உலர் கழிவுகளை பழனி நகராட்சியில் அமைக்கப்படவுள்ள எரியூட்டும் மையத்திற்கு அனுப்பவும், அவ் எரியூட்டும் மையத்திற்கான கட்டுமான செலவு, இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினத்தினை 15வது நிதிக்குழு பரிந்துரை நிதியின் மூலம் பகிர்ந்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>Financial Tie Up for Handling the Project</u>**

| Name of the Municipality | Dry Waste (Non saleable (TPD) | Percentage of the dry waste qty (%) | Proportionate Cost (Rs.In laksh) | Funds available under tied up grant per instalment | Total tied up grant available (Rs. In lakhs) |
|---|---|---|---|---|---|
| Kodaikanal | 8.5 | 22.12 | 66.38 | 69.92 | 139.84 |

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) மேற்படி தோராய செலவின பங்குத் தொகையினை 15வது நிதிக்குழு பரிந்துரை நிதியின் மூலம் பகிர்ந்து கொள்ளவும் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **938, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலக ந.க.எண்.19775/கே2/2019–3, நாள்.15.12.2020 நாளிட்ட கடிதத்தில் நகர்ப் பகுதிகளில் இயங்கிவரும் முடிதிருத்தும் நிலையம், அழகு நிலையம், ஸ்பா மற்றும் மசாஜ் சென்டர் போன்ற வணிக நிறுவனங்கள் சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன்படி, தொழில் உரிமம் பெறப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதால் மேற்கண்ட நிறுவன உரிமையாளர்கள் தொழில் உரிமம் பெறவேண்டி நாளிதழ் அறிவிப்பு வெளியீடு செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/–க்கு (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4234/2017/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **939, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) மலைகளின் இளவரசி என்றழைக்கப்படும் கொடைக்கானல் நகராட்சி 24 வார்டுகளுடன் கூடிய 21.45 ச.கி.மீ பரப்பளவு கொண்ட ஓர் சிறப்பு நிலை நகராட்சியாகும். 2011ஆம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 36463 ஆகும். தற்பொழுது உள்ள மக்கள் தொகை 38850 ஆகும். நகராட்சி பகுதிகளிலுள்ள சாலைகளின் நீளம் 51 கி.மீ ஆகும். மேலும் நாள்தோறும் சுற்றுலா மற்றும் தொழில் சார்ந்த பணிகளுக்கென வந்த செல்லும் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 15000 ஆகும். அதே சமயம் கோடை கால சீசன் மலர்கண்காட்சி, ஆகஸ்ட் மாதம் நடைபெறும் இரண்டாம் சீசன் மற்றும் தொடர் அரசு விடுமுறை நாட்களில் வந்து செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை சுமார் 50000ஆகும். நகரில் 10266 குடியிருப்புகளும், 400க்கும் மேற்பட்ட தங்கும் விடுதிகளும் 1700 க்கும் மேற்பட்ட சிறு கடைகள் உணவகங்கள் மற்றும் தேநீர் கடைகளும் 38 கல்வி நிறுவனங்கள் 10க்கும் மேற்பட்ட மருத்துவ மனைகள், 10க்கும் மேற்பட்ட சுற்றுலா இடங்கள் தினசரி சந்தை, வாரச்சந்தை, ஒரு பேருந்து நிலையம், 48 பொது மற்றும் சமுதாய கழிப்பறைகள் உள்ளன. நாளொன்றுக்கு நகரில் உருவாகும் குப்பைகளின் அளவு 17 மெ.டன் ஆகும். நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 105 ஆகும். தற்சமயம் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 64 ஆகும். அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.3) நாள்.30.04.1997ன்படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 196 ஆகும்.

24 வார்டுகளிலும் துப்புரவு பணி மேற்கொள்ளுதல் வீடு வாரியாக தரம் பிரிக்கப்பட்ட குப்பைகள் வாங்கும் பணி, கழிவு நீர் கால்வாய் சுத்தப்படுத்தும் பணி, லாரி மூலம் குப்பைகள் அகற்றும்பணி, டெங்கு தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணி மற்றும் கொடைக்கானல் மலைப்பிரதேசமாக இருப்பதால் புதர்ச் செடிகள் அகற்றும் பணி போன்ற பணிகளை திறம்பட மேற்கொள்ளவும், அவ்வப்போது ஆய்வுப் பணிக்காக மத்திய மாநில அமைச்சர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் வருகைபுரியும் போது கூடுதலாக கவனம் செலுத்தி துப்புரவு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே தனியார் மூலம் மேற்கொள்ளப்படும் துப்புரவு பணியின் ஒப்பந்த காலம் முடிய உள்ளதாலும், 64 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு சுற்றுலா மற்றும் மலை பிரதேசமாக உள்ள கொடைக்கானல் நகரில் துப்புரவு பணி மேற்கொள்வது சிரமமமாக இருப்பதால் அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.3) நாள்.30.04.1997ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள 196 துப்புரவு பணியாளர்களில் நிரந்தர பணியாளர்கள் 64 பேர் தவிர்த்து மீதம் தேவைப்படும் 132 துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2019–2020ஆம் ஆண்டிற்கான தரவிகித பட்டியலில் நிர்ணயிக்கப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களின் ஊதிய தொகைக்கு மிகாமல் 365 நாட்களுக்கு (ஒராண்டுக்கு) கணக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது அனுமதி பெறவேண்டி பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

கொடைக்கானல் சர்வதேச சுற்றுலா தலமாக இருப்பதால், சுற்றுலா பயணிகளின் வருகை நாள்தோறும் அதிகரித்து வருவதாலும், தூய்மை இந்தியா திட்ட பணிகளை திறம்பட கையாண்டு நகரின் தூய்மையினை பராமரிக்கப்பட வேண்டியுள்ளதாலும் 132 துப்புரவு பணியாளருக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெறப்படும் வரை ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட 96 பணியாளர்களுக்கு 2019–2020ம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியர் அவர்களது தரவிகித பட்டியலின்படி செலவினம் கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

| வ.எண் | பொருள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களது தரவிகித பட்டியலின்படி ஒரு துப்புரவு பணியாளருக்கு 2019–2020ம் ஆண்டிற்கு நாள் ஒன்றுக்கு பணியாளர் கூலி. | 509 |
| 2) | ஒரு துப்புரவு பணியாளருக்கு ஆண்டு கூலி 365 x 509 | 1,85,785 |
| 3) | ஒரு துப்புரவு பணியாளருக்கு EPF 13.16% ஓர் ஆண்டிற்கு | 24,449 |
| 4) | ஒரு துப்புரவு பணியாளருக்கு ESI 4.75% ஓர் ஆண்டிற்கு | 8825 |
| 5) | ஒரு துப்புரவு பணியாளருக்கு சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுக்கு ஓர் ஆண்டிற்கு 8.25 x 365 | 15,327 |
| 6) | ஒரு துப்புரவு பணியாளரின் ஆண்டு கூலியில் ஒப்பந்தத்ாரருக்குரிய நிர்வாக செலவு 5% | 9289 |
| 7) | ஒரு துப்புரவு பணியாளருக்கு ஓர் ஆண்டிற்கு ஆகும் மொத்த ஊதியத் தொகை | 2,43,675 |
| 8) | 96 துப்புரவு பணியாளர்களுக்கு 365 நாட்களுக்கு (ஓர் ஆண்டிற்கு ஆகும் மொத்த செலவுத் தொகை. | 2,33,92,800 |

ரூ.2,33,92,800/– (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து தொன்னூற்று இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்).

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) பொது சுகாதார துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3140/2016/எச்.1).

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **940, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) இயக்குநர், பொது சுகாதாரம் (ம) நோய்த் தடுப்பு மருந்து துறை, சென்னை–06 அவர்களின் கடிதம் ந.க.எண்.66143/MCH–1/UHC/2020, நாள்.09.09.2020 மற்றும் வட்டார மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், மன்னவனூர், கொடைக்கானல் அவர்களின் கடிதம் ந.க.எண்.156/அ1/2020, நாள்.04.12.2020 கடிதத்தின்படி, மன்னவனூர் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட கொடைக்கானல் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ் உள்ள மூஞ்சிக்கல், உகார்தே நகர் மற்றும் பாம்பார்புரம் ஆகிய மூன்று நகர்பகுதிகளில் MINI CLINICS அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்துதரக் கோரி கேட்டுக் கொண்டுள்ளார்கள். ஆகவே, மேற்கண்ட மூன்று இடங்களில் இடம் ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். (ந.க.எண்.4832/09/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **941, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு டி, பிளாக் 19, நகரளவு எண். 2–1 –ல் மூலதன மானியம் , இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைநிரப்பு நிதி 2017–2018 ன் கீழ் புதியதாக நவீன எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண். 228 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை (நநி3) நாள். 13.11.2008 ல் நவீன எரிவாயு தகனமேடையை தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனஙகளின் மூலம் பராமரிப்பதற்கு அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அராசணையில் தெரிவித்துள்ளபடி உரிய நிபந்தனைகளுக்குற்பட்டு நவீன எரிவாயு தகனமேடை சிவாலயம் சேரிட்டபிள் டிரஸ்ட்., கொடைக்கானல் மூலம் பராமரிக்க விரும்புவதாக அதன் அறக்கட்டளை நிர்வாகி விண்ணப்பித்துள்ளார். மேலும் மேற்கண்ட அறக்கட்டளையை 05.03.2018ல் பதிவு செய்துள்ளார். மேற்படி அறக்கட்டளைக்கு எரிவாயு தகனமேடை பராமரிப்பு பணிகளை ஒப்படைக்கும்பட்சத்தில் எரிவாயு தகனமேடையில் பூஙகா அமைத்தல் மற்றும் இதர பராமரிப்பு பணிகளை அறக்கட்டளை மூலம் செய்ய தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி அறக்கட்டளைக்கு பராமரிப்பு பணிகளை ஒப்படைக்கும் பொருட்டு கீழ்க்காணும் விவரப்படியான நிபந்தனைக்கு உட்பட்டு அனுமதி வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. எரிவாயு தகனமேடை மயானத்தில் காரியஙகள், இறுதி சடஙகு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்தக் காரியஙகளுக்கும் நிகழ்ச்சிக்கும் பயன்படுத்தக்கூடாது. எந்த சட்ட விரோத நிகழ்ச்சிகளும் நடைபெற கூடாது.
2. ஒலி, ஒளி பெருக்கிகளை பயன்படுத்திட கூடாது.
3. மேற்படி இடத்தில் பொருட்கள் ஏதும் களவாடப்பட்டாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துகள் சேதம் ஏற்பட்டாலோ பராமரிக்கும் நிறுவனமே முழுப் பொறுப்பாகும்.
4. ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது எரிவாயு மயானமாக பயன்படுத்திட வேண்டும்.
5. எரிவாயு மயானத்தில் எந்தவித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது எளிதில் தீப்பிடிக்ககூடிய பொருட்கள் கொண்ட கூரைகள் கண்டிப்பாக அமைக்கப்படகூடாது.
6. ஏரியூட்டும் சடஙகு தொடர்பாக பின்னணியில் எழும் சட்ட பிரச்சனைக்கு நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும்.

7. மூன்று ஆண்டு காலத்திற்கு மட்டுமே பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும்.
8. பராமரிப்பு அனுமதியை புதுப்பிப்பதும் , மறுப்பதும் நகராட்சியின் தேவையினை பொறுத்தது.
9. இப்பணி மேற்கொள்ளும் அறக்கட்டளை நகராட்சி ஆணையர் அவ்வப்போது வகுக்கும் விதி முறைக்கும் ஆலோசனைகளுக்கும் இதர சட்ட விதிமுறைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.
10. எரிவாயு தகனமேடையினை பயன்படுத்தி ஒரு பிணத்தை எரிப்பதற்கு கட்டணமாக அதிகபட்சமாக ரூ. 4000/– வரை பெற்றுக் கொள்ளலாம். அதற்கு மேல் எக்காரணம் கொண்டும் வாங்கக் கூடாது. மேலும், எரிவாயு தகன மேடை மொத்த பராமரிப்பு மற்றும் மின் கட்டணம் தாங்களே செலுத்தி வரவேண்டும்.
11. வேறு ஏதேனும் விரும்பதகாத புகார்கள் பெறப்பட்டால் உடனடியாக முன்னறிவிப்பின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். இதற்கு நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.
12. மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து ஒப்பந்த பத்திரம் நகராட்சிக்கு எழுதி கொடுக்க வேண்டும்.

அலுவலக குறிப்பு : எரிவாயு தகன மேடையின் பராமரிப்பு பணிகளை மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பராமரிக்க சிவாலயம் சேரிட்டபிள் டிரஸ்ட், கொடைக்கானல் என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **942, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், மதுரை கூட்டாண்மை வணிக அலுவலக மேலாண்மை இயக்குநர் அவர்களின் தனது 9.10.2020ம் தேதிய கடிதத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மானியக்கோரிக்கை 110 விதியின் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி, கொடைக்கானல் நகரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனைக்கு சொந்தமான, சர்வே வார்டு–D, பிளாக் எண்–5, நகரளவு எண்.9/1,2 உள்ள இடத்தில் சுமார் 280' x 60' என்ற அளவில், (பரப்பு = 16,800 சதுர அடி) தற்காலிக திறந்த வெளி வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்து பயன்படுத்திக்கொள்ள அனுமதி கோரியுள்ளார். அன்னாரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1)மேற்படி மனுதாரர் சமர்ப்பித்துள்ள உத்தேச வரைபடத்தின்படியும், மனை உரிமைஆவணங்களின்படியும், முழுமைத்திட்டநில வகைப்பாட்டின்படியும் (MUZ) திருப்தியாக இருப்பதால், மனுதாரருக்கு அனுமதி வழங்கலாம்.

2)1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 306 ,321 (1)(2)(3)ன் கீழ் கட்டணம் ஆண்டு வருமானத்திற்குட்பட்டு அதில் 2.5 % வசூலிக்கலாம். அனுமதி காலம் மூன்று ஆண்டுவரை நிர்ணயம் செய்யலாம்.ஆனால் ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்தில் முன்னதாகவே, அந்த ஆண்டிற்கான கட்டணத்தை செலுத்த வேண்டும்.

3) மேலும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில்வரி திடக்கழிவு சேவைக் கட்டணம் ஆகியவற்றை தேவையான நேர்வுகளில் வசூலிக்கலாம்.

4) மேற்படி இடத்தில் 12 மணி நேரத்திற்கு ஒரு முறை நிறுத்தக்கூடிய கார் ஒன்றுக்கு 40/–60/– வீதம்,வேன் ஒன்றுக்கு ரூ.60/–90/–வீதம், பஸ் ஒன்றுக்கு ரூ.100/–150/–வீதம் கட்டணம் வசூலிக்கஅனுமதிக்கலாம் வாகனங்களின் தடங்கள் நிலத்தில் பதிவாக வண்ணம் தரமான தளங்கள் அமைக்கப்படவேண்டும்.

5) தீயணைப்பு சாதனம் நிறுவப்பட வேண்டும். உரிய மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும். மழை நீரால் மண் சரிவு ஏற்படா வண்ணம் தடுப்பு சுவர்கள் அமைத்தல் வேண்டும். குடிநீர் வசதி, கழிப்பிடம் வசதி அமைக்க வேண்டும். திடக்கழிவுகளை உரிய முறையில் அப்புறப்டுத்த வேண்டும்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **943, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகரம் இந்தியாவின் முக்கிய சுற்றுலா நகரமாகும். சுற்றுலா பயணிகள் அதிகளவில் நகருக்கு வருகை புரிவதினால் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பெட் பாட்டில்கள் அதிகளவில் நகரில் பகுதியில் சேகரமாகிறது. இதனை தடுக்கும் பொருட்டு இந்நகரில் தற்போது நெகிழி ஒழிபபு நடவடிக்கையின் முதற்கட்டமாக தண்ணீர் பாட்டில்களை தடைசெய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, நகர் பகுதியில் தானியஙகி தண்ணீர் நிலையஙகள் ( Water ATM) சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடஙகளில் பயன் பெறும் பொருட்டு கீழ்க்கண்ட இடஙகளில் அமைத்திடலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலகம் அருகில் | – 1 எண்ணம் |
| 2. | சுற்றுலா படகு குழாம் அருகில் | – 2 எண்ணம் |
| 3. | பிரைண்ட் பூஙகா அருகில் | –1 எண்ணம் |
| 4. | சாய் ஸ்ருதி அருகில் | –1 எண்ணம் |
| 5. | மூஞ்சிக்கல் பேருந்து நிலையம் | –1 எண்ணம் |
| 6. | அண்ணாசாலை உயர்கோபுர மின் விளக்கு அருகில் | –1 எண்ணம் |
| 7. | பேருந்து நிலையம் | –1 எண்ணம் |
| 8. | நாயுடுபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் | – 1 எண்ணம் |
| 9. | அப்சர்வேட்டரி ரோஜா தோட்டம் அருகில் | – 1 எண்ணம் |

எனவே, பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் மேற்கண்ட 10 இடஙகளில் தானியஙகி குடிநீர் வழஙகும் இயந்திரஙகள் விருப்பத்தின் பேரில் தனியார் மூலம் (Expression of Interest) அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **944, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட ஆண்டு குத்தகை இனஙகள்,

1. கோக்கர்ஸ்வாக் பகுதியில் இயற்கை எழில்காட்சிகளை கண்டுகளிக்கும் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
2. கவி தயாகராஜர் சாலையில் உள்ள நகராட்சி வாரச்சந்தையில் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
3. பசுமை பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம்.
4. புதிய அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள சிற்றுந்து நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

31.3.2021 உடன் குத்தகை உரிமம் முடிவடைகிறது. எனவே, மேற்கண்ட ஆண்டு குத்தகை இனஙகள் அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.09.2008ன்படி 01.04.2021 முதல் 31.3.2024 வரை உரிமம் வழஙகுவதற்கும் மேற்கண்ட குத்தகை இனஙகளுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தயார் செய்து அழைப்பு விடுத்து 01.04.2021 முதல் குத்தகைதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்யவும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொது ஏலக் கட்டுப்பாடுகள் மற்றும் சிறப்புக் கட்டுப்பாடுகள் ஒப்புதலுக்கும், குத்தகை இனம்பற்றிய அறிவிப்பினை தினசரி நாளிதழ்கள் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும், அதற்காக ஆகும் கட்டணத்திற்கும் மற்றும் இதர செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். (ந.க.எண்.4413/2014/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **945, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சியில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு அறிவிப்பினை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் 24.7.2020 முதல் 39 வேலை நாட்களுக்கு ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்தவகையில் நாள் ஒன்றுக்கு ரூ. 1800/– வீதம் தொகை ரூ. 70,200/– (ரூபாய் எழுபதாயிரத்து இருநூறு மட்டும் ) வழஙகிட கோரி இசைராணி ஆடியோஸ் நிறுவனத்தின் பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, பட்டியலின்படி தொகை ரூ. 70,200/– யை இசைராணி ஆடியோஸ் நிறுவனத்திற்கு பொது நிதியின் மூலம் வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **946, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) கொடைக்கானல் நகராட்சியில் தினசரி நகர் பகுதியில் 17 மெட்ரிக் குப்பைகள் உருவாகிறது. உருவாகும் குப்பைகளை நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடஙகில் தினசரி கொட்டப்பட்டு வருகிறது. இவ்வாறு கொட்டப்படும் குப்பைகள் நகராட்சி துாய்மை பணியாளர்களை கொண்டு மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்தெடுக்கப்படுகிறது. தற்போது துாய்மை இந்தியா திட்டம் 2015 ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி ரூ. 110.00 இலட்சம் மதிப்பீட்டில் குப்பைகளை உரமாக்கிட இயந்திரஙகள் பொருத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளது. குப்பை கிடஙகில் சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை ஏற்கனவே பொருத்தப்பட்ட இயந்திரஙகளை கொண்டு பயனுள்ள பொருட்களாக மாற்றி பயன்படுத்திடவும், குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பைகளின் பரப்பினை குறைத்திடவும் (Processing daily fresh mixed municipal solid waste and converts into final useful products with residue with minimize land fill at the end of the process) நகராட்சியில் போதுமான துாய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் திடக்கழிவு மேலாண்மையில் திடக்கழிவு மேலாண்மையினை கையாள இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, நகராட்சி குப்பை கிடஙகில் திடக்கழிவு மேலாண்மை பணியினை கையாள தனியார் மூலம் பணிக் கொள்ள மன்றத்தின் அனமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ. 25.00 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **947, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) பொது சுகாதார பிரிவு பணியாளர்களுக்கு Bio-Metric வருகை பதிவேடு தயார் செய்வதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 683 நாள். 22.10.2019 ன் படி M/s. MicroPlus Networking Solutions, மதுரை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழஙகப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. பணி உத்தரவில் பொது சுகாதார பிரிவு துப்புரவு பணியாளர்கள் இரண்டு டிவிசனுக்கு மட்டுமே பணி உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. மூன்றாம் டிவிசனுக்கும் சேர்த்து Bio-Metric வருகை பதிவேடு அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, நகர்மன்றத் தீர்மானம் எண். 683 நாள். 22.10.2019 ன் படி M/s. MicroPlus Networking Solutions, மதுரை நிறுவனத்திற்கு வழஙகப்பட்ட பணி உத்தரவு விலை விகிதத்தின்படியே மேலும் ஒரு Bio-Metric வருகை பதிவேடு அதே விலை விகிதத்தில் அதே நிறுவனத்தின் மூலம் பொது நிதியின் கீழ் அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **948, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான படகு குழாமில் சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொள்வதற்கு போதுமான படகுகள் இல்லாததால் சுற்றுலா பயணிகள் வெகுநேரம் படகு குழாமில் காத்துகிடக்க வேண்டியுள்ளது. மேலும், வரும் கோடை காலத்தினை கருத்தில் கொண்டும், நகராட்சியின் வருவாயினை பெருக்குவதற்காகவும், கூடுதலாக கீழ்க்கண்டவாறு படகுகள் பொது நிதியின் மூலம் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | நகராட்சி படகு குழாமிற்கு துடுப்பு படகுகள் மற்றும் Pedaling படகுகள் வாங்குதல் | 9.60 |

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **949, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

13) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான நட்சத்திர ஏரியினை மேம்படுத்திடவும், அழகுப்படுத்திடவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவின்பேரில் டெட்ரா டெக் என்னும் தனியார் தொழில்நுட்ப நிறுவனம் மூலம் விரிவான திட்ட அறிக்கை ரூ. 87.930 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னைக்கு 2014 ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது 2019–2020 விலை விகிதத்திற்கு கொடைக்கானல் ஏரியினை புனரமைத்திட திருத்திய திட்ட அறிக்கை ரூ. 106.00 கோடிக்கு. தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு 01.10.2019 ல் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து 06.11.2019 அன்று தலைமை செயலகத்தில் முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் 15 கூடுதல் விபரஙகளுடன் கொடைக்கானல் ஏரி அழகுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் குறித்த விரிவான திட்ட அறிக்கையினை மீள சமர்ப்பித்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி கூடுதல் விபரஙகளுடன் விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமாப்பிக்கப்பட்டதில் மேலும் சில மாற்றஙகள் செய்து விரிவான திட்ட அறிக்கையினை மீள சமர்ப்பித்திட அறிவுறுத்தப்பட்டது.

மேலும், நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 24467/2019/ WS1 நாள். 12.11.2019 ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு,

1. பல அடுக்கு வாகன நிறுத்தத்துடன் (Multi level Car Parking) புதியதாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.
2. வருவாய் ஈட்டி தரும் வகையில் புதிய கட்டமைப்புகளுக்கான மதிப்பீட்டுடன் திட்டஅறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.
3. திட்ட மதிப்பீடு 2013–2014 ம் ஆண்டு தயார் செய்யப்பட்டதால் தற்போது தேவைக்கேற்ப முழுமையாக மாற்றியமைத்து, சுற்றுச் சூழல் ரீதியாகவும் மற்றும் உட்கட்டமைப்பு தொடர்பாகவும் ஒருஙகிணைத்து தற்போது மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தனியார் தொழில்நுட்ப வல்லுநர் நியமிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு திட்ட அறிக்கை இரண்டு தொகுப்புகளாக தயாரிக்கப்பட்டுள்ளது.

| Sl. No. | Description of Work | Amount (Rs.inCrore) | Grand Total |
|---|---|---|---|
| I | **GENERAL COST ESTIMATE FOR ECO RESTORATION OF KODAIKANAL LAKE - PHASE 1** | | |
| 1 | Construction of RCC Retaining wall for 96.63m along one side of Nabha Garden & Strengthening of Retaining Wall of around 3KM length around Kodaikanal Lake | 3.32 | |
| 2 | Construction of Concrete Pavement and Renovation of Stone Pavement as a part of in Cycle way & Walkway respectively around Kodaikanal Lake for 4.714Kms to ensure a safety road environment. | 5.85 | |
| 3 | Storm Water Management for all the major 27 water Inlets and Providing Bio Reactors and Silt Chambers for Pre Treatment of water before entering the Kodaikanal Lake | 0.70 | |

| | | | |
|---|---|---|---|
| 4 | Innovative Arrangements to enhance the quality of water to Class B by providing floating plant structures with fishes enclosed for an area of about 11,000 Sqm - Aquaponics | 4.44 | |
| 5 | Renovation of the existing Boat House with the latest amenities and sufficient safety features and proving latest Electric boats and other necessary tourist boats. | 1.30 | |
| 6 | Procurement of Aquatic Weed Harvester Boat and the removal of Weeds all around the lake of about 7.6 Lakh Cu.m- De-Weeding | 1.03 | |
| 7 | Removal of the Existing Fence and Relocating it to 3Kms. Construction of Aesthetical and Innovative fencing of three different types of FRP Material as per the site requirements all along the perimeter of the Lake of 4.714 Kms | 1.28 | |
| 8 | Construction of Greenery along the lake and in Walk way and Cycle way as per the design requirements. | 1.47 | |
| 9 | Construction of Seven Numbers of aesthetical Environment Friendly Bio Public Toilets Around the Lake at regular Intervals. | 1.27 | |
| 10 | Supplying and Installation of Laser Floating Fountains for Aesthetical and Aeration of the lake at Seven different locations as per the analysis. | 1.29 | |
| | Base Cost of the Project | 21.95 | |
| | GST 12% (CGST-6%,SGST-6%) | 2.63 | |
| | Price escalation for the year 2020-21 @ 10% | 2.20 | |
| | Provision for Labour Welfare Fund @ 1% | 0.22 | **27.00** |
| II | GENERAL COST ESTIMATE FOR TOURISM DEVELOPMENT OF KODAIKANAL LAKE - PHASE 2 | | |
| 1 | Parking Management - Providing Multilevel Car Parking (MLCP) next to Kodaikanal Lake near Amma Unavagam for providing effective parking solutions for the tourist vehicle and tourist buses with highly sophisticated shopping complex. | 21.24 | |
| 2 | Renovation of all the parks like Anna Park, Children's Park, Nabha Garden, Municipal Plaza and the Anna Car Parking and Providing all the basic amenities like improvement of Stable and Cycle Parking around the kodaikanal Lake for Tourism development and effective engagement of the tourist around the lake. | 2.75 | |
| 3 | Sub total including Base Cost of the Project | 23.99 | |
| | GST 12% (CGST-6%,SGST-6%) | 2.88 | |
| | Price Escalation for the year 2020-21 @ 10% | 2.40 | |
| | Provision for Labour Welfare Fund @ 1% | 0.29 | 29.56 |
| | Total Cost | | **56.56** |

| Phase No. | Description of Work | Grand Total (Rs.in lakh) |
|---|---|---|
| I | GENERAL COST ESTIMATE FOR ECO RESTORATION OF KODAIKANAL LAKE | **27.00** |
| II | GENERAL COST ESTIMATE FOR TOURISM DEVELOPMENT OF KODAIKANAL LAKE | **29.56** |
| | Total | **56.56** |

மேற்க்கண்டவாறு இரண்டு தொகுப்புகளாக தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை மீள இத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது. தற்போதைய விலை விகிதத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி கொடைக்கானல் நட்சத்திர ஏரி புணரமைப்பு பணியினை மேற்கொள்வதற்கு அரசின் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முழு மானியமாக நிதி ஒதுக்கீடும், நிர்வாக அனுமதியும் வழஙக கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **950, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

14) கொடைக்கானல் நகராட்சி 24.65 சதுர கி.மீட்டர் பரப்பளவுள்ள ஒரு சிறப்பு நிலை நகராட்சி ஆகும். 2021 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 36501 ஆகும். இந்நகராட்சி பகுதியில் தினந்தோறும் 17 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகின்றன. இது தவிர இந்நகராட்சி பகுதியில் 85 உணவகங்கள் , 420 தங்கும் விடுதிகள், 130 காய்கறி மற்றும் பழக்கடைகள், 42 கறிக்கடைகள் மூலமும் தினசரி 3500 கி.கி குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு வருகின்றன. கொடைக்கானல் நகரம் மலைப்பாங்கான பிரதேசமாக உள்ளதாலும், கடல் மட்டத்தை விட 6998 அடி உயரத்தில் இருப்பதாலும் மிகவும் குளிரான சூழ்நிலையே ஆண்டு முழுவதும் நிலவுகிறது. இதனால், இந்நகராட்சி பகுதிகளில் தேங்கும் மொத்த குப்பைகளிலிருந்து எளிதில் மக்கக்கூடிய குப்பைகளை பிரித்தெடுத்து உரம் தயார் செய்ய இயலாத நிலை உள்ளது. மேலும் இதே போன்ற குளிர் பிரதேசங்களிலும், மேலை நாடுகளிலும் குப்பைகளை மக்க வைத்து உரம் தயார் செய்வதற்குப் பதிலாக Anaerobic digestion முறையில் உயிரி எரிவாயு (Biogas) உற்பத்தி செய்து மக்கும் குப்பைகளை கையாளுகின்றனர். எனவே, கொடைக்கானல் நகராட்சியில் தினசரி சேகரமாகும் மொத்த குப்பையில் மக்கும் தன்மையுள்ள சுமார் 8.00 மெட்ரிக் டன் குப்பைகளுடன் உணவகங்கள், தங்கும் விடுதிகள், காய்கனி கடைகள், இறைச்சி கடைகளிலிருந்து சேகரமாகும் குப்பைகளையும் சேர்த்து தினசரி 10 மெட்ரிக் டன் கையாளத் தக்க வகையிலான உயிரி எரிவாயு உலை (Thermopile Biomethanation Plant) அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3.49 கோடிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் கொடைக்கானல் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நான்கு எண்ணிக்கையில் பசுமை உரக்குடில்கள் அமைக்க (Micro composting Centre) ரூ.188.80 இலட்சம் மதிப்பிட்டில் 7–வது உயர்மட்ட குழுவில் அனுமதி வழஙகப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரது செயல்முறை உத்தரவு ந.க.எண்.18281/டீஓ2/2018 நாள். 20.8.2018 மற்றும் 22866/பி3/2018 நாள்.23.8.2018–ன் படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டு தொகையும் விடுவிக்கப்பட்டது தொகை விடுவிக்கப்பட்டது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | ஆனந்தகிரி 4–வது தெருவில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 46.20 | முடிக்கப்பட்டு செயல்பட வில்லை என்பதால் மீட்பு வளம் மையமாக (Resource Recovery Centre) மாற்றப்பட்டுள்ளது |
| 2 | அப்பர் லேக் சாலையில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 46.20 | பணி துவக்கப்படவில்லை. |
| 3 | சிவனடி ரோட்டில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 46.20 | |
| 4 | கொய்யாப்பாறை பகுதியில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 46.20 | |
| 5 | Biomining முறையில் குப்பைகளை அகற்றம் செய்திட | 247.00 | |

மேற்படி அனுமதி வழஙகப்பட்ட பணிகளில் வ.எண். 1 பணி மட்டுமே முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் கொடைக்கானல் பகுதியில் நிலவும் குறைந்த வெப்ப நிலையில் உரம் தயார் செய்ய இயலாத நிலையிலும் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாகவும் பணிகள் கைவிடப்பட்டது. எனவே, இந்நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை திறம்பட கையாண்டு திடக்கழிவு மேலாண்மை விதி 2016–யை செயல்படுத்த ஏதுவாக மேற்படி தொகையிலிருந்து கீழ்க்கண்ட பணியினை செயல்படுத்திட திருத்திய நிர்வாக அனுமதி வழஙகிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | நகராட்சி குப்பை கிடஙகு பகுதியில் தினசரி 10 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையிலான சூடுபடுத்தப்பட்ட உயிரி எரிவாயு உலை (Thermopile Biomethanation Plant)அமைத்தல் | ரூ. 3.49 கோடி |

மேற்படி திட்டப்பணி தொழில் நுட்பம் வாய்ந்த பணி என்பதால் கட்டி, இயக்கி, பராமரித்தல் தனியார் அடிப்படையில் பஙகளிப்புடன் (Public Private Partnership mode) Engineering Procurement Contract and O&M basis மூலம் மேற்கொள்ளவும், தொடர் ஆண்டு பராமரிப்பு செலவினத்தை இத்திட்டத்தில் பஙகு பெறும் உணவகஙகள், தஙகும் விடுதிகள், கறிக்கடைகள் உள்ளிட்ட நிறுவனஙகளிடமிருந்தும், நகராட்சி பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: கொடைக்கானல் நகராட்சி குப்பை கிடங்கு பகுதியில் துய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சூடுபடுத்தப்பட்ட உயிரி எரிவாயு உலையை அமைக்க ஆகும் மதிப்பீடு ரூ.3.49 கோடிக்கு திருத்திய அனுமதி பெறவும், இத்திட்டத்தினை கட்டி, இயக்குதல் மற்றும் பராமரித்தல் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி செயல்படுத்தவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **951, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

15) கொடைக்கானல் நகராட்சி 1899 ல் தோற்றுவிக்கப்பட்டு 31–5–1994ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை , அரசாணை (பல்வகை) எண். 143 ன் படி 31–5–1994 முதல் சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்தப் பரப்பளவு 21.45 சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்நகராட்சி 24 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 2011 ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 36501 ஆகும். இந்நகருக்கு தினசரி வந்து செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தோராயமாக 10000 ஆகும். கோடை காலஙகளில் இதன் எண்ணிகை 50000 க்கும் அதிகமாக உள்ளது. நாள்தோறும் சுமார் 45000 மக்கள் தொகைக்கு ஏற்பவே அனைத்து வகையாக துப்புரவு பணிகளையும் நகராட்சி நிர்வாகம் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது.

இந்நகராட்சியில் 35 எண்ணம் தள்ளுவண்டிகள், 3 எண்ணம் டிப்பர் லாரிகள் 80எண்ணம் டம்பிளேசர் குப்பை தொட்டிகள் 2 எண்ணம் டம்பர் பிளேசர் லாரிகள் 2எண்ணம் பொலிரோ பிக்கப் ஈப்புகள், 8 எண்ணம் இலகுரக வாகனஙகள் உள்ளன. இந்நகராட்சி வாகனஙகளை கொண்டு தினசரி சேகரிக்கப்படும் 17 மெட்ரிக் டன் குப்பைகள் நகரில் இருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நகராட்சி குப்பை கிடஙகில் கொட்டப்பட்டு வருகிறது.

**தூய்மை இந்தியா திட்டம் 2018–2019**

கொடைக்கானல் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நான்கு எண்ணிக்கையில் பசுமை உரக்குடில்கள் அமைக்க (Micro composting Centre) ரூ.188.80 இலட்சம் மதிப்பிட்டில் 7–வது உயர்மட்ட குழுவில் அனுமதி வழஙகப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரது செயல்முறை உத்தரவு ந.க.எண்.18281/டீஓ2/2018 நாள். 20.8.2018 மற்றும் 22866/பி3/2018 நாள்.23.8.2018–ன் படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டு தொகையும் விடுவிக்கப்பட்டது. ரூ. 247.00 இலட்சம் மதிப்பீட்டில் Biomining முறையில் குப்பைகளை அகற்றம் செய்திடவும் நிதி விடுவிக்கப்பட்டது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | ஆனந்தகிரி 4–வது தெருவில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 46.20 | முடிக்கப்பட்டு செயல்பட வில்லை என்பதால் மீட்பு வளம் மையமாக (Resource Recovery Centre) மாற்றப்பட்டுள்ளது |
| 2 | அப்பர் லேக் சாலையில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 46.20 | பணி துவக்கப்படவில்லை. |
| 3 | சிவனடி ரோட்டில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 46.20 | |
| 4 | கொய்யாப்பாறை பகுதியில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 46.20 | |
| 5 | Biomining முறையில் குப்பைகளை அகற்றம் செய்திட | 247.00 | |
| | மொத்தம் | 385.60 | |

மேற்படி அனுமதி வழஙகப்பட்ட பணிகளில் வ.எண். 1 பணி மட்டுமே முடிக்கப்பட்டு மீதமுள்ள ரூ.385.60 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு பணிகள் கொடைக்கானல் பகுதியில் நிலவும் குறைந்த வெப்ப நிலை மற்றும் பொதுமக்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாக உரம் தயார் செய்ய இயலாத நிலையில் பணிகள் கைவிடப்பட்டது.

மேலும் 15 வது மத்திய நிதி குழு மானிய நிதியின் மூலம் முதலாம் மற்றும் இரண்டாம் தவணையாக ரூ. 139.84 இலட்சம் ( ரூ.69.92 இலட்சம் +ரூ.69.92 இலட்சம் ) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியில் இருந்து பழனி நகராட்சியில் அமைக்கப்படும் இன்சினிரேட்டர் பணிக்கு கொடைக்கானல் நகராட்சியின் பஙகுத் தொகை ரூ. 91.35 இலட்சம் போக மீதம் ரூ.48.49 இலட்சம் உள்ளது.

7வது உயர்மட்ட குழுவில் அனுமதிக்கப்பட்ட
தொகையில் மீதம் ரூ. 385.60 இலட்சம்
15வது மத்திய நிதிக் குழு பரிந்துரை நிதி
பழனி நகராட்சிக்கு ஒதுக்கீடு போக
(இன்சினிரேட்டர் ) மீதம் ரூ. 48.49 இலட்சம்

மொத்தம் ரூ. 434.09 இலட்சம்

மீதமுள்ள 434.09 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி குப்பை கிடஙகு பகுதியில் தினசரி 10 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையிலான சூடுபடுத்தப்பட்ட உயிரி எரிவாயு உலை (Thermopile Biomethanation Plant) ரூ.349.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட நிர்வாக அனுமதி கோரி பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள நிதி ஒதுக்கீடு ரூ. 434.09 இலட்சம்
சூடுபடுத்தப்பட்ட உயிரி எரிவாயு உலை
(Thermopile Biomethanation Plant) ரூ. 349.00 இலட்சம்

மீதமுள்ள தொகை ரூ. 85.09 இலட்சம்

தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 ல் வாஙகப்பட்ட 8 எண்ணம் இலகு ரக வாகனம் (LCV) வாஙகப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. கொடைக்கானல் நகரம் மலைப்பிரதேசம் என்பதினால் இவ்வாகனஙகளின் இலுவை திறன் மற்றும் உந்து சக்தி குறைவாக உள்ளதால் நகர் பகுதியில் இருந்து குப்பைகளை 16 கி.மீட்டர் தொலைவில் உள்ள குப்பை கிடஙகிற்கு கொண்டு செல்வதில் காலதாமதமும், கூடுதலான எரிபொருள் செலவும் ஏற்படுவதுடன் குப்பைகள் தேஙகும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, கொடைக்கானல் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை முழுமையாக செயல்படுத்தும் பொருட்டும், சுற்றுலா நகர் என்பதினை கருத்தில் கொண்டும், நகரினை தூய்மையாக வைக்கும் பொருட்டு மலைப்பிரதேசத்திற்கு ஏற்ப அதிக உந்து சக்தி மற்றும் இழுவை திறன் கொண்ட இலகு ரக வாகனம் ( Light Vehcle 4x4) 7 எண்ணம் எஞ்சியுள்ள தொகை ரூ. 85.09 இலட்சத்தில் வாஙகிக் கொள்ள உரிய நிர்வாக அனுமதி வழஙகிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **952, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

16) கொடைக்கானல் நகராட்சி, பொறியியல் பிரிவு குடிநீர் வாகனம் TN57 AY 9358 ஆனது கடந்த 15.8.2020 அன்று அண்ணாசாலையில் விபத்து ஏற்பட்டு மதுரை ARS பணிமனையில் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டு இவ்வாகனத்திற்கு தி நியூ இந்தியா அஸூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் வாகனத்தின் சேத ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ரூ. 1,01,500/– மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது கோடை காலம் ஆரம்பிக்க உள்ள நிலையில் குடிநீர் வாகனம் அத்தியாவசிய தேவையாக உள்ளதால் இவ்வாகனத்தின் பழுதுகளை மதுரை ARS பணிமனையில் மேற்கொள்ளவும், அதற்கான தொகையினை குடிநீர் கணக்கு நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) செலவினத்தினை குடிநீர் கணக்கு நிதியின் மூலம் மேற்கொள்ளவும், காப்பீடு நிறுவனத்தின் மூலம் தொகை விடுவிக்கப்படும்பட்சத்தில் செலவினத்தினை ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு ந.க.எண். 6536/2009/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **953, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

17) கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான, புரூட்டன் காம்பவுண்டு பகுதியில் அமைந்துள்ள கே.ஆர்.ஆர்.கலையரங்க கட்டிடம், 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஏலம் விடப்பட்டு, அதன் பின்னர், பல்வேறு காரணங்களால் அக்கட்டிடம், ஏலம் விடப்படாமலும், துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படாமலும், தற்போது எவ்வித பயன்பாடுமின்றி இடியும் தருவாயில் உள்ளது. தரை முழுவதும் சேதமடைந்திருப்பது மட்டுமல்லாமல், எற்கனவே கட்டிடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முழுமையடையாமல், சிதிலமடைந்து காணப்படுகிறது. மேற்கூரைப் பகுதி மழையின் போது ஒழுகி உட்புறத்தில் நீர் தேங்குவதால் துர்நாற்றம் வீசுவதோடு பொது சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தியும் வருகிறது. மேலும், கால்நடைகள் உள்ளே சென்று சுகாதாரக் கேடு ஏற்படுதுவதோடு, சமூக விரோத செயல்களும் அதிகமாக நடைபெறுகிறது. இக்கட்டிடத்தினால் தற்போது எவ்வித வருவாயும் வருவதில்லை. எனவே, இந்தக் கட்டிடத்தினை உடனடியாக மேம்படுத்துவது கட்டாயமாக உள்ளது.

ஏற்கனவே, மேற்கண்ட கட்டிடத்திற்கு 2012-2013ல் இருந்து 2014-2015 வரை கீழ்க்கண்டவாறு நகராட்சியால் ரூ.70.00 இலட்சம் வரை செலவு செய்து பணிகள் செய்யப்பட்டும் பணிகள் அறைகுறையாகவே உள்ளது. முழுமையடையவில்லை.

| வருடம் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 2012-2013 | கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான கே.ஆர்.ஆர்.கலையரங்க வளாகத்தினை சமுதாய கூடமாக மாற்ற பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 10.00 |
| 2012-2013 | கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான கே.ஆர்.ஆர்.கலையரங்கத்தில் மேற்கூரை மற்றும் பழுதுகளை சரி செய்தல் | 10,00 |
| 2013-2014 | கே.ஆர்.ஆர். கலையரங்க சமுதாய கூடத்தில் உணவுக் கூடம் அமைக்கும் பணி | 10.00 |
| 2013-2014 | கே.ஆர்.ஆர். கலையரங்கத்தில் மின் பணி மற்றும் தரைத் தளம் அமைத்தல் | 10.00 |
| 2013-2014 | கே.ஆர்.ஆர். கலையரங்க சமுதாய கூடத்தினை சுற்றி சுற்று சுவர் அமைத்தல் | 10.00 |
| 2013-2014 | கே.ஆர்.ஆர். கலையரங்க வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் சமுதாய கூடத்திற்கு அலங்கார டைல்ஸ் பதித்தல், சமையலறை பகுதியில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் | 10.00 |
| 2014-2015 | கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான கே.ஆர்.ஆ.ர. கலையரங்கத்தில் உணவு கூடம் அமைத்தல் | 10.00 |
| | மொத்தம் | 70.00 |

மேற்கண்ட கட்டிடத்தை அரசு ஆணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.19.9.2008ன் கீழ் பலமுறை ஏலம் கோரியும் ஒருவரும் ஏலம் கோர முன்வரவில்லை.

தற்போதுள்ள சூழ்நிலையில், அக்கட்டிடத்தினை நகராட்சியால் பராமரிப்பு செய்து, உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி உடனடியாக பணிகள் மேற்கொள்ள ஏற்படும் செலவினங்களை எதிர்நோக்கும் நிலையில் நகராட்சியில் நிதி நிலை திருப்திகரமானதாக இல்லை. தற்போது நகராட்சிப் பொறியாளரால் மேற்கண்ட கட்டிடத்திற்காக ரூ.1.35 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே ரூ.70.00 இலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டநிலையில், முழு அளவில் பயன்படுத்தப்படாமல், ஏலத்தின் மூலம் வருவாய் ஈட்டுவது உறுதியாக எதிர்பார்க்க இயலவில்லை.

மேலும், மேற்கண்ட கே.ஆர்.ஆர்.கலையங்கம் கட்டிடம் ஏரியிலிருந்து 200 மீட்டருக்குள் உள்ளதால் அதனை இடித்து புதிதாக கட்டவோ அல்லது மாற்றி அமைக்கவோ மற்றும் புதிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவோ, தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, மலைப்பிரதேச கட்டிட விதிகள் மற்றும் கொடைக்கானல் முழுமைத் திட்டத்தில் விதிகளில் வழிவகை இல்லை. பழைய கட்டிடத்தை மராமத்து செய்து அதே பயன்பாட்டில் மட்டுமே தொடர இயலும். எனவே, புதிய கட்டிடம் கட்ட வழிவகை இல்லாததால், பழைய கட்டிடத்தை மராமத்து செய்வத காலத்தின் கட்டாயமாகும்.

மேலும், இதேபோன்று நகராட்சிக்குச் சொந்தமான, கவி தியாகராசர் சாலையில் அமைந்துள்ள 8 அறைகள் கொண்ட தங்கும் விடுதி மற்றும் அண்ணா சாலையில் உள்ள 5 அறைகள் கொண்ட தங்கும் விடுதி ஆகியவை பயன்பாடற்ற நிலையில் உபயோகப்படுத்துவதற்கு இயலாத நிலையில் இருந்தவற்றை நகர் மன்றத் தீர்மானம் எண்.947 மற்றும் 948, நாள். 13.1.2014ன்படி அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 3.7.2007ல் சொல்லப்பட்டுள்ள கொள்கை கோட்பாட்டிற்கு உட்பட்டு, அரசின் கொள்கைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் நகராட்சிக்கு கட்டுப்பட்ட அசையா சொத்துக்களை பாதுகாப்பதோடு, அவற்றை பயனுடையதாகவும் செயல்படுத்தி அதன் மூலம் நகராட்சிக்கு வருமானம் வரக்கூடிய அளவிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி குத்தகைதாரரிடம் ஒப்படைக்கப்பட்டு அதன் மூலம் நகராட்சிக்கு வருவாய் ஈட்டப்பட்டு வருகிறது.

எனவே, மேற்கண்ட கே.ஆர்.ஆர்.கலையரங்கக் கட்டிடத்தை (உள்ளது உள்ளபடியே,) தற்போது உள்ள கட்டிடத்தின் அமைப்பில் எவ்வித மாறுதல்களுமின்றி (without structural modification) தங்களது சொந்த செலவில் மராமத்து செய்து அருங்காட்சியகமாக சுற்றுலா சார்ந்து அமைத்துக்கொண்டு கட்டிடத்தை பயன்படுத்திக் கொள்ள அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.3.7.2007ல் கண்டுள்ள கொள்கை கோட்பாடுகளுக்கிணங்க மாத வாடகை அடிப்படையில் ஒப்படைத்து வருவாய் ஈட்டிடும் வகையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அவ்விளம்பரத்தினை செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் நாளிதழில் விளம்பரம் செய்திடவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

நகராட்சியின் நிதி நிலையை மேம்படுத்தி வருவாய் ஈட்டிடும் பொருட்டும், நகராட்சிக்குக் கட்டுப்பட்ட அசையாச் சொத்துக்களை பாதுகாத்திடும் பொருட்டும், மேற்கண்ட கே.ஆர்.ஆர். கலையரங்க கட்டிடத்தை அரசாணை நிலை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 3.7.2007-ல் சொல்லப்பட்டுள்ள கொள்கை கோட்பாட்டிற்கு உட்பட்டு பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், நாளிதழ் மற்றும் ஒப்ந்தப்புள்ளி செய்தி மலரில் வெளியிடவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1759/2017/அ3)

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | **954, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

## நகராட்சிக்கு சொந்தமான கே.ஆர்.ராமசாமி கட்டிடத்தினை மியூசியமாக அனுபவிக்கும் உரிமம்

## சிறப்பு கட்டுப்பாடுகள்

1. கே.ஆர்.ராமசாமி கட்டிடத்தை சுற்றுலா பயணிகளை கவரும் அம்சங்களுடன் மியூசியமாக அனுபவித்துக் கொள்ள வேண்டும்.
2. கே.ஆர்.ராமசாமி கட்டிடத்தில் தற்போதுள்ள அமைப்பில் (structure) எவ்வித மாறுதல்களும் செய்யாமல் மராமத்து பணிகள் செய்யப்பட வேண்டும்.
3. கட்டிடத்தில் அமைக்கப்டும் மேற்கூரையானது மலைப்பிரதேச சீதோஷணம் மற்றும் இயற்கைச் சீற்றங்களின்போது பாதிப்படையாதவாறு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
4. கே.ஆர்.ராமசாமி கட்டிடத்தை சுற்றிலும் சுகாதாரம் பேணப்பட வேண்டும். சுகாதார பணியாளர்கள் மூலம் அன்றாடம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
5. மராமத்துப் பணிகள் செய்வதற்கான முழுச் செலவினங்களையும் குத்தகைதாரரே தனது சொந்த செலவில் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்காக நகரட்சியிடம் எவ்வித இழப்பீடோ, உரிமை கோரலோ செய்யக்கூடாது.
6. கட்டிடத்தைச் சுற்றிலும் பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் வசதிக்கேற்ப போதுமான காற்றோட்ட வசதிகள் ஏற்படுத்த வேண்டும்.
7. கட்டிடத்தைச் சுற்றிலும் உரிய முறையில் விதிகளைப் பின்பற்றி விபத்து மற்றும் தீ தடுப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
8. பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் மியூசியத்தை பார்வையிட உள்ளே செல்ல தனி வழி மற்றும் வெளியே செல்ல தனி வழி ஏற்படுத்த வேண்டும்.
9. மாற்றுத் திறனாளிகளின் வசதிக்கேற்ப தேவையான இடங்களில் உரிய முறையில் சாய்வு தளங்கள் அமைக்கப்பட வேண்டும்.
10. ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித் தனியாக போதுமான கழிப்பறை வசதிகள் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.
11. மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்துவதற்கேற்ப உரிய முறையில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
12. பார்வையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய முறையில் CCTV கேமராக்கள் பொறுத்தப்பட வேண்டும்.
13. மத்திய மற்றும் மாநில அரசுகள் அவ்வப்போது நிர்ணயிக்கும் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு குத்தகைதாரர் நடந்து கொள்ள வேண்டும்.
14. குத்தகைத் தொகையில் சேவைக் கட்டணம் (GST) சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.
15. கே.ஆர்.ராமசாமி கட்டிடத்தில் தற்போது நிலையிலுள்ள டிக்கெட் கொடுக்கும் அறை, ஜெனரேட்டர் மற்றும் ஆப்பரேட்டர் அறைகளை சுற்றுலா பயணிகளின் தேவைக்கேற்ப இதர பயன்பாட்டிற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.
16. பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் தேவைக்கேற்ப வளாகத்தில் குத்தகைதாரர் சிற்றுண்டி சாலை அமைத்துக் கொள்ளலாம்.
17. கே.ஆர்.ராமசாமி கட்டிடத்தில் தங்களது சொந்த செலவில் மின் சாதனங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
18. மின் இணைப்பு மற்றும் மின் கட்டணம் நகராட்சி ஆணையர், கொடைக்கானல் என்ற பெயரில், நகராட்சி ஆணையரின் அனுமதி பெற்று மின்சார வாரியத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.
19. அரசு ஆணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.3.7.2007–ல் வகுக்கப்பட்டுள்ள கொள்கைக் கோட்பாடுகளின்படி கட்டிடம் ஒப்படைக்கப்படும்.
20. அரசு ஆணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.3.7.2007–ன்படி, மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவு முடிவடைவதன்பேரில் இக்குத்தகை தன்னியல்பாகவே (automatically) ஒன்பது ஆண்டுகள் புதுப்பிக்கப்படும்.
21. அவ்வாறு புதுப்பிக்கப்படும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை தொகை 15 (பதினைந்து) சதவீதம் உயர்த்தப்படும்.
22. கே.ஆர். ராமசாமி கட்டிடத்தை மராமத்து செய்வதற்கு மிக அதிகமான முதலீடு மற்றும் செலவு குத்தகைதாரரால் ஏற்படுத்தப்படுவதால் எக்காரணம் கொண்டும் இக்குத்தகை ஒன்பது ஆண்டுகள் வரை ரத்து செய்யப்படமாட்டாது.
23. மேற்கண்ட அரசாணையின்படி குத்தகைக் காலம் முடிவுற்றோ அல்லது குத்தகைதாரர் நகராட்சிக்குச் சொந்தமான மேற்கண்ட கட்டிடத்தை திரும்ப ஒப்படைக்கும் போது, கட்டிடத்தில் எவ்வித சேதமுமின்றி நல்ல முறையில் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
24. அவ்வாறு திரும்ப ஒப்படைக்க நேரிட்டால், குத்தகை தாரரால் கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள தளவாடச் சாமான்கள், மின் சாதனங்கள், மற்றும் இதர பொருட்கள் நகராட்சிக்குச் சொந்தமானதாகும். அவற்றிற்கு குத்தகைதாரர் உரிமை கோரக் கூடாது.
25. மேற்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்வதாக ஒப்புக் கொண்டு ரூ.100/–க்கான முத்திரைத் தாளில் ஒப்பந்தம் எழுதி அதனை சார்–பதிவாளர் அலுவலகத்தில் தங்களது சொந்த செலவில் பதிவு செய்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
26. மேற்கண்ட நிபந்தனைகளை மீறினால் எவ்வித முன்னறிவிப்புமின்றி உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

*******

18) கொடைக்கானல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பசுமைப் பள்ளத்தாக்கு பகுதியில், இயற்கை எழில் காட்சிகளை கண்டுகளிக்க ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இது மிகவும் பிரசித்தி பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா தளமாக விளங்குகிறது. இந்த இடத்திற்கு வந்து செல்ல நகராட்சியால் இதுநாள் வரை எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. அதே போல மேற்கண்ட இடத்திற்கு முன்புறம் அதிக அளவில் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. இந்த வாகனங்களில் வரும் சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்களால் அதிக அளவில் குப்பைகள் விட்டுச் செல்லப்படுகின்றன. இதற்காகவும் எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. மேற்கண்ட இடத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், நகராட்சியால் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு வருடத்திற்கு சுமார் ரூ.2.25 லட்சம் வரை செலவிடப்படுகிறது. அதே போல தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு சுகாதார பணிகள் மேற்கொள்வதால் 4 பணியாளர்களுக்கு ஆண்டு தோறும் (4x45000x12=ரூ.21,60,000) ரூ.21.60 இலட்சம் வரை செலவிடப்படுகிறது. ஆனால் நகராட்சிக்கு எவ்வித வருவாயும் வருவதில்லை. மேலும், இதே போன்ற வனத்துறைக்கு சொந்தமான பல்வேறு சுற்றுலா தளங்களில் வனத்துறையினரால் நுழைவுக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

எனவே, இந்நகராட்சிக்குட்பட்ட மேற்கண்ட பசுமைப் பள்ளத்தாக்குப் பகுதியில் இயற்கை எழில் காட்சிகளை கண்டுகளிக்க நுழைவுக் கட்டணமாக கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்து துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளவும், அதன் விபரத்தை திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| நபர் ஒருவருக்கு நுழைவுக் கட்டணம் | : | | – | ரூ.5/– |
| (10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசம்) | | | | |
| வாகன நிறுத்தக் கட்டணம் | : | கார் | – | ரூ.40/– |
| | : | வேன் | – | ரூ.60/– |
| | : | பேருந்து | – | ரூ.100/– |

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **955, நாள். 28.12.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.